www.agaram.lk



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

ක්‍රිස්තියානි ධර්මය I
கிறிஸ்தவம் I
Christianity I

43 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

1. திருவிவிலியம் ஏனைய நூல்களிலிருந்து வேறுபட்டிருப்பதற்கான காரணம் காட்டும் போது அதை ஓர் இலக்கிய நூல் எனவும் கூறமுடிவது அதில்,
   (1) பழமொழிகளும் உள்ளடங்கியிருப்பதாகும்.
   (2) காட்சிகளும் உள்ளடங்கியிருப்பதாகும்.
   (3) புராதன சிந்தனைகளும் உள்ளடங்கியிருப்பதாகும்.
   (4) மொழிநடை இலகுவானதாக இருப்பதாகும்.
   (5) புராதன கருத்துக்களும் உள்ளடங்கியிருப்பதாகும்.

2. இணைத்திருமுறை நூலின் பெயர்ப்பட்டியலைச் சேர்ந்தது
   (1) தோபித்து நூல் (2) எஸ்தர் நூல் (3) மீக்கா நூல் (4) செக்கரியா நூல் (5) மலாக்கி நூல்

3. திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி கி.மு. 1200 - கி.மு. 1020 இற்கு இடைப்பட்ட, அரசர்களின் காலத்தில் இடம்பெற்ற பிரதான நிகழ்வு
   (1) சாலமோன் மன்னன் வியாபாரத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டமை
   (2) றெகேபோவாம் அரசனாக நியமிக்கப்பட்டமை
   (3) இஸ்ராயேல் அரச பரம்பரை ஆரம்பிக்கப்பட்டமை
   (4) ஜெரோபோவாம் அரசன் புராதன வழிபாட்டுத் தலத்தைப் புனரமைப்புச் செய்தமை
   (5) வட, தென் அரசுகள் உருவாகியமை

4. நாடு திரும்பிய பின் எருசலேம் மதிலைக் கட்டியெழுப்புவதில் தலைமை தாங்கியவர் யார்?
   (1) செருபாபேல் (2) எஸ்ரா (3) தாரியுஸ் (4) சீசர் (5) நெகேமியா

5. கற்றோரின் மொழியென அழைக்கப்பட்டது
   (1) இலத்தின் மொழி (2) கிரேக்க மொழி (3) எபிரேய மொழி (4) ஆங்கில மொழி (5) அரபு மொழி

6. உடன்படிக்கையோடு இணைக்கப்பட்ட இஸ்ராயேல் மக்கள் சட்டங்களைக் கடைப்பிடிப்பிடிக்க வேண்டும் என்பதும், எப்போதும் உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கமாக இருக்க வேண்டும் என்பதும் உபகருப்பொருளாகக் கொள்ளப்படுவது
   (1) J மரபில் (2) E மரபில் (3) D மரபில் (4) P மரபில் (5) Q மரபில்

7. படைப்பைப் பற்றித் தொடக்க நூலில் இரண்டு கதைகள் குறிப்பிடப்பட்டிருப்பினும், நமக்கு அதிலுள்ள முக்கியத்துவம் யாதெனில்,
   (1) அதில் கூறப்படும் இறையியல் செய்தியைத் தேடிப்பார்த்தல் ஆகும்.
   (2) அதிலுள்ள விஞ்ஞான காரணிகளைத் தேடிப்பார்த்தல் ஆகும்.
   (3) எல்லாவற்றிற்கும் முன்பே உலகம் படைக்கப்பட்டதை எடுத்துக்காட்டுதல் ஆகும்.
   (4) இறைவன் உலகை எவ்வாறு படைத்துள்ளார் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் ஆகும்.
   (5) படைப்பை விருத்தி செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் ஆகும்.

8. இறைவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குறுதியாகிய வாக்களிக்கப்பட்ட நாட்டை உரிமையாக்கிக் கொடுப்பதற்கான செயற்றிட்டம் ஆரம்பிக்கப்படுவது
   (1) ஈசாக்கை அழைத்ததன் மூலம் (2) யாக்கோபுவை அழைத்ததன் மூலம்
   (3) வெள்ளப்பெருக்கின் மூலம் (4) மோசேயை அழைத்ததன் மூலம்
   (5) யோசுவாவை அழைத்ததன் மூலம்

[பக். 2 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



9. மோசே தமது தொழிலாகத் தேர்ந்து கொண்டது
   (1) விவசாயம் (2) மந்தை மேய்த்தல் (3) வில்வித்தை
   (4) நிர்வாகத்துறை (5) பொருளாளர் பதவி

10. பத்துப் பெரும் துன்பங்களும் எந்த மரபுகளின் அடிப்படை எண்ணக்கருவாகும்?
   (1) குரு, யாவே, இணைச்சட்டம்
   (2) குரு, எலோகிம், இணைச்சட்டம்
   (3) யாவே, எலோகிம், இணைச்சட்டம்
   (4) குரு, யாவே, எலோகிம்
   (5) குரு, யாவே, எலோகிம், இணைச்சட்டம்

11. மேய்ப்பர்களின் விழாவான இஸ்ராயேல் பாஸ்காவின் முக்கிய அம்சம்
   (1) திராட்சை இரசப் பானம் (2) புளியாத அப்பம் (3) புதிய அறுவடை
   (4) தலைப் பேறுகளைப் பலியாக்குதல் (5) இரத்தம்

12. தமது அழைப்பினைப் பொது வழிபாட்டு வடிவம் கொண்டதாக அன்றி இறைவனோடு ஏற்பட்ட உரையாடலின் விளைவாக அனுபவித்த இறைவாக்கினர்
   (1) எசாயா (2) எரேமியா (3) மீக்கா (4) எசேக்கியேல் (5) செக்கரியா

13. எசாயா 1-39 வரையான முதலாம் எசாயா நூல் எழுதப்பட்டது,
   (1) பபிலோனியாவுக்கு நாடு கடத்தப்பட்ட காலத்தில் எசாயாவினால் ஆகும்.
   (2) பபிலோனியாவுக்கு நாடு கடத்தப்படுவதற்கு முன் எசாயாவினால் ஆகும்.
   (3) யூதா அரசுக்கு அசீரியாவினால் எச்சரிக்கை விடுவிக்கப்பட்ட காலத்தில் எசாயாவினால் ஆகும்.
   (4) யூதா அரசுக்கு அசீரியாவினால் எச்சரிக்கை விடுவிக்கப்படுவதற்கு முன்னர் எசாயாவினால் ஆகும்.
   (5) யூதா மக்கள் அசீரியாவிற்கு நாடு கடத்தப்பட்டிருந்த காலத்தில் ஆகும்.

14. 'ரஹிமி' என்னும் கிரேக்கச் சொல்லின் பொருளை விளக்கும் சொற்கள் தொகுதியினைத் தெரிவுசெய்க.
   (1) உதவி, அருள், விருப்புள்ளவர், மிகச்சிறந்தவர்
   (2) நட்பு, கருணை, மென்மையானவர், பரிவுள்ளவர்
   (3) அன்பானவர், கருணை, நற்குணம், பராமரித்தல்
   (4) உதவி, கருணை, விருப்புள்ளவர், அன்பானவர்
   (5) மிகச்சிறந்த, நற்குணம், பராமரித்தல், அருள்

15. நற்செய்தி எழுதப்பட்டது தொடர்பாகத் தரப்பட்டுள்ள பின்வரும் வெளிப்பாடுகளைக் கருத்திற் கொள்க.
   A - எருசலேம் நகரின் அழிவுக்குப் பின்னர் எழுதப்பட்டது.
   B - பலஸ்தீனாவுக்கு வெளியே வாழ்ந்த புற இனச் சூழலில் எழுதப்பட்டது.
   C - எருசலேம் நகரின் அழிவுக்குச் சிறிது காலத்திற்குப் பின்னர் எழுதப்பட்டது.
   D - எபிரேயத்திலும் அரபு மொழியிலும் எழுதப்பட்டதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.
   இவற்றில் லூக்கா நற்செய்தியுடன் தொடர்புடைய சரியான வெளிப்பாடுகள்
   (1) A யும் B யும் (2) A யும் C யும் (3) A யும் D யும் (4) B யும் C யும் (5) C யும் D யும்

16. தூய மத்தேயு நற்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இயேசுவின் அறிவுரைகளின் எண்ணிக்கை
   (1) இரண்டு ஆகும். (2) மூன்று ஆகும். (3) நான்கு ஆகும். (4) ஐந்து ஆகும். (5) பத்து ஆகும்.

17. இறை ஆட்சி என்னும் வாழ்க்கை முறை சமூக மட்டத்திலிருந்து நோக்கும் போது மிகக் கடினமானதும் மனதைக் கவரக்கூடியதாக இல்லாத போதிலும் நிலை வாழ்வின் மகிழ்ச்சியை உருவாக்கித் தருவதென எடுத்துக்கூறப்படுவது
   (1) திருமண விருந்து உவமையின் மூலம் (2) புதையல் பற்றிய உவமையின் மூலம்
   (3) வலை பற்றிய உவமையின் மூலம் (4) முத்து பற்றிய உவமையின் மூலம்
   (5) புளிப்புமா பற்றிய உவமையின் மூலம்

18. முதலாவது நூற்றாண்டின் இறுதிக் (கி.பி. 80 - கி.பி. 90) காலப்பகுதியில் எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டு நூல்
   (1) தூய லூக்கா நற்செய்தி (2) தூய யோவான் நற்செய்தி (3) தூய மாற்கு
   (4) தூய மத்தேயு நற்செய்தி (5) திருத்தூதர் பணிநூல்

19. மெசியாவின் கலிலேய மறைத் தூதுப்பணி முடிவடைவது,
   (1) தூய பேதுருவின் விசுவாச அறிக்கையுடனாகும்.
   (2) பாடுகள், மரணத்துடனாகும்.
   (3) பாடுகளின் முன் அறிவிப்புடனாகும்.
   (4) மெசியாவின் முடிவுரையுடனாகும்.
   (5) எருசலேம் கோவிலின் அழிவு பற்றிய முன் அறிவித்தலுடனாகும்.

20. இயேசு மக்களோடு இணைந்துள்ள நிலையை வெளிப்படுத்தும் பெயர்
   (1) இறை மகன் (2) கலிலேய மகன் (3) மானிட மகன்
   (4) பயணம் செய்யும் மனிதன் (5) எருசலேமின் மானிட மகன்

[பக். 3 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



21. மக்களிடம் மறைவாக இருந்த இறை உறவு கிறிஸ்துவின் வாழ்க்கைப் பலியின் வழியாக வெளிப்படுத்தப்பட்ட சம்பவம்
    (1) புளித்த காடியைக் குடித்தல்
    (2) தமது உயிரைப் பிதாவுக்கு ஒப்புக்கொடுத்தல்
    (3) முள்முடி சூட்டப்படுதல்
    (4) செந்நிற ஆடை அணிவித்தல்
    (5) திருக்கோயிலின் திரை இரண்டாகக் கிழிதல்

22. தூய மாற்கு நற்செய்தியின்படி, சிலுவையில் அறையப்பட்டிருந்த இயேசுவைப் பார்த்து, "சிலுவையிலிருந்து இறங்கி உன்னையே விடுவித்துக்கொள்" என்று பழித்துரைத்தவர்கள்
    (1) உரோமைப் படை வீரர்கள்
    (2) சிலுவையில் அறையப்பட்டிருந்த கள்வர்கள்
    (3) மறைநூல் அறிஞர்கள்
    (4) தலைமைக் குருக்கள்
    (5) அவ்வழியே சென்றவர்கள்

23. பின்வரும் கூற்றுக்களைக் கருத்திற்கொள்க.
    A - மீண்டும் பிறத்தல் அல்ல.
    B - ஆன்மா அங்குமிங்கும் திரியும்.
    C - நிலையான தன்மையோ முடிவோ அற்றது.
    D - விண்ணக சுகத்தை உரிமையாக்கிக் கொள்ளும்.

    இவற்றுள் மறுவாழ்வுடன் தொடர்படைய கூற்றுக்களைத் தெரிவுசெய்க.
    (1) A யும் B யும் (2) A யும் C யும் (3) A யும் D யும் (4) B யும் C யும் (5) B யும் D யும்

24. உயிர்த்த கிறிஸ்துவை நம்புவதற்கு அவரைத் தொட்டுப் பார்ப்பது அவசியமில்லை என இயேசு யாருக்குக் கூறினார்?
    (1) தூய பேதுருவுக்கு
    (2) தூய யோவானுக்கு
    (3) நிக்கதேமுவுக்கு
    (4) மக்தலா மரியாவுக்கு
    (5) சமாரியப் பெண்ணுக்கு

25. தூய யோவான் 14:26 இன்படி, "உங்களுக்கு அனைத்தையும் கற்றுத்தருவார். நான் கூறிய அனைத்தையும் உங்களுக்கு நினைவூட்டுவார்" என்பதன் மூலம் கருதப்படுவது யாது?
    (1) கிறிஸ்துவின் உயிர்ப்பு
    (2) திருத்தூதர்களின் மறைத்தூதுப் பயணம்
    (3) கிறிஸ்து மீண்டும் வருதல்
    (4) திருமுழுக்கு யோவானின் வருகை
    (5) தூய ஆவியின் வருகை

26. "நீங்கள் எருசலேமை விட்டு நீங்க வேண்டாம். என்னிடமிருந்து கேட்டறிந்த தந்தையின் வாக்குறுதி நிறைவேறக் காத்திருங்கள்" அந்த வாக்குறுதியாவது,
    (1) கிறிஸ்து நாதர்
    (2) தூய பேதுரு
    (3) தூய ஆவியானவர்
    (4) திவ்வியநற்கருணை
    (5) தூய ஸ்தேவான்

27. இரண்டாம் மறைத்தூதுப் பயணத்தில் தூய பவுல் அக்கிலாவையும் பிரிஸ்சில்லாவையும் சந்தித்தது
    (1) கொரிந்தியில்
    (2) பிலிப்பியில்
    (3) துரோவாவில்
    (4) ஏதென்ஸில்
    (5) தெசலோனிக்காவில்

28. ஆரிய பேதகத்திற்கு எதிராகப் போராடிய முன்னோடி
    (1) அலெக்சாந்திரியாவின் தூய சிறில்
    (2) அலெக்சாந்திரியாவின் தூய அத்தனாசியார்
    (3) கொன்ஸ்தாந்திநோபிள் தூய பிளேவியன்
    (4) அக்விலியாவின் தூய ஜெறோம்
    (5) தகாஸ்தேயின் தூய அகஸ்டின்

29. திருச்சபைத் தந்தையர்கள் எழுதிய சில நூல்கள் கீழே தரப்பட்டுள்ளன.
    A - ஹெக்சப்லா
    B - செல்சசுக்கு எதிராக எழுதிய நூல்
    C - முக்கிய கோட்பாடுகள் பற்றிய நூல்
    D - நிறைவாழ்வின் வழி
    E - இறைவனின் நகரம்

    இவற்றில் ஓரிஜன் எழுதிய நூல்களாவன
    (1) A,B,C ஆகியன
    (2) A,B,E ஆகியன
    (3) A,D,E ஆகியன
    (4) B,C,D ஆகியன
    (5) C,D,E ஆகியன

30. 9ஆம் நூற்றாண்டின் இறுதியரைப்பகுதியில் கிழக்கு ஐரோப்பாவில் காஷார்ஸ் மற்றும் ஸ்லாவிக் கோத்திர மக்கள் மத்தியில் கிறிஸ்தவ மறையைப் பரப்பும் தூதுப்பணிக்கு உதவியவர்கள்
    (1) தூய சிறில், தூய ஜஸ்டின் ஆகியோர்
    (2) தூய மெதோடியஸ், தூய ஜெறோம் ஆகியோர்
    (3) தூய ஜெறோம், தூய ஜஸ்டின் ஆகியோர்
    (4) தூய சிறில், தூய ஜெறோம் ஆகியோர்
    (5) தூய மெதோடியஸ், தூய சிறில் ஆகியோர்

[பக். 4 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



31. உலகம் தொடங்கியது முதல் மீட்புக் கிடைப்போர், மீட்புக் கிடைக்காதோர் யாரென்பதை இறைவன் தீர்மானித்துள்ளார் என்பதைப் பிரதான போதனையாகக் கொண்டவர்
(1) ஜோண் கல்வின் (2) மாட்டின் லூத்தர் (3) சுவிங்லி
(4) சேர் தோமஸ் மூர் (5) ஜோன் பிசர்

32. கி.பி. 1626 இல் பிரான்ஸ் நாட்டின் மறைமாவட்டக் குருக்களின் புனிதத் தன்மையை வளர்ப்பதற்கென துறவற சபையை ஆரம்பித்தவர்
(1) தூய லொயோலா இஞ்ஞாசியார் (2) தூய பீற்றர் கனிசியஸ் (3) தூய பெட்ரிக் ஓசானம்
(4) தூய வின்சென்ட் டி போல் (5) தூய றொபட் பெலார்மின்

33. 'அன்னையும் ஆசிரியையும்' (Matter Et Magistra) என்னும் சுற்றுமடலை வெளியிட்டவர்
(1) திருத்தந்தை 11 ஆம் பத்திநாதர்
(2) திருத்தந்தை 23 ஆம் அருளப்பர்
(3) திருத்தந்தை 13 ஆம் சிங்கராயர்
(4) திருத்தந்தை 7 ஆம் கிறகோரி
(5) திருத்தந்தை 2 ஆம் அருளப்பர் சின்னப்பர்

34. போர்த்துகேயர் காலத்தில் மறைத்தூதுப் பணியில் ஈடுபடுவோரைப் பாதுகாத்தல், அவர்களின் நலன் பேணுதல் ஆகிய பொறுப்புக்களை ஏற்று செயற்பட்ட பாதுகாப்புத்திட்டத்தினைக் குறிக்கும் பெயர் என்ன?
(1) மக்னா கார்ட்டா சட்டம் (2) பத்றோ ஆடோ ஒப்பந்தம்
(3) எதிரிகளிடமிருந்து பாதுகாப்பு (4) கிழக்குப் பேரரசுக்குக் கையளித்தல்
(5) மேற்குப் பேரரசுக்குக் கையளித்தல்

35. "மேன்மைமிக்க தந்தையே, உங்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய நற்செய்தியொன்றினை அறியத்தருகின்றோம். புதிய இனத்திற்கு இறைவனின் நற்செய்தியைக் கொண்டு செல்லும் நல்ல செய்தியை உங்களுக்கு மிக்க மகிழ்ச்சியோடு அறிவிக்கின்றோம்" என்ற பகுதியுடன் தொடர்புடைய நிகழ்வு
(1) போர்த்துக்கேயர் இந்நாட்டுக்கு வருகை தந்த செய்தியை அறிவித்தல்
(2) தூய பவுல் புற இனத்தாருக்கு நற்செய்தியைக் கொண்டு செல்லல்
(3) பெந்தகோஸ்தே நிகழ்வு
(4) ஒல்லாந்தர் இந்நாட்டுக்கு வருகை தந்த செய்தியை அறிவித்தல்
(5) ஆங்கிலேயர் இந்நாட்டுக்கு வருகை தந்த செய்தியை அறிவித்தல்

36. பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொள்க.
- ஆங்கிலேயர் காலத்தில் செயற்படுத்தப்பட்டது.
- முழுமையான சமய சுதந்திரம் பெற்றுக் கொடுக்கப்பட்டது.
- கத்தோலிக்கருக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த அனைத்து சட்டங்களும் நீக்கப்பட்டன.

மேற்கூறிய விடயங்கள் உள்ளடங்கியிருப்பது
(1) உதவி பெறும் பாடசாலை முறையில் (2) கோல்புறூக் ஆணைக்குழுவில்
(3) மிலான் சாசனத்தில் (4) மக்னா கார்ட்டா சட்டத்தில்
(5) கரித்தாஸ் நிறுவனத்தில்

37. இலங்கையில் முதன் முதலாக ஆயர் அபிஷேகம் பெற்றவர்
(1) மேதகு ஆயர் வின்சன் றொசய்ரோ (2) மேதகு ஆயர் ஸ்டீவன் செமெரியா
(3) மேதகு ஆயர் கிலேரியன் சில்லானி (4) மேதகு ஆயர் பீலிக்ஸ் அலெக்சான்டர்
(5) மேதகு ஆயர் ஒராஷியோ பட்டிகீன்

38. கி.பி. 1869 இல் தென் திருத்தூதரக மறை மாவட்டத்திற்கு முதன் முறையாக வருகை தந்த பெண் துறவியர் சபை
(1) திருக்குடும்ப சபை (2) பெரிய கார்மேல் சபை (3) நல்லாயன் சபை
(4) தூய தூதர்கள் சபை (5) பிரான்சிஸ்கன் சகோதரிகளின் சபை

39. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் வெளியீடுகளில் முதலாவதாகப் பிரகடனம் செய்யப்பட்டது
(1) கிறிஸ்தவ சபை ஒற்றுமையும் உரையாடலும்
(2) இறைமக்கள் என்னும் கொள்கைத் திரட்டு
(3) திருவழிபாடு பற்றிய கொள்கைத் திரட்டு
(4) பிற மதங்களுடனான உரையாடல்
(5) பொது நிலையினரின் மேய்ப்புப் பணிக்கொள்கைத் திரட்டு

40. ஒல்லாந்தர் காலத்தில் தலைமை ஆசிரியரின் மதிப்பும் மரியாதையும் சமூகத்திலே உயர்ந்து விளங்கக் காரணமாயிருந்தது
(1) நாட்குறிப்பு பார்வையிடப்பட்டமை (2) ஒழுக்கம் பேணப்பட்டமை
(3) நேரசூசி தயாரிக்கப் பெற்றமை (4) 'தோம்பு' பொறுப்பை நடாத்தியமை
(5) வகுப்பு மேற்பார்வை செய்யப்பட்டமை

[பக். 5 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



41. பாலைநிலப் பயணத்தில் இறைவன் இஸ்ராயேல் மக்களுக்குக் கொடுத்த சட்டதிட்டங்களினதும் படிப்பினைகளினதும் கருத்தாயமைவது
    (1) பத்துக் கட்டளையைப் பெற்றுக் கொடுப்பதாகும்.
    (2) சகோதர அன்பில் ஒருவருக்கொருவர் நியாயத்தையும் நீதியையும் நிறைவேற்றுவதாகும்.
    (3) இறைவன் வாக்குப் பண்ணிய நாட்டை நோக்கி அழைத்துச் செல்வதாகும்.
    (4) நல்லதொரு சமுதாயத்தை உருவாக்குவதாகும்.
    (5) செங்கடலை இரண்டாகப் பிரிப்பதாகும்.

42. இயேசு தமது சீடர்களுக்குக் கொடுத்த புதிய கட்டளை யாது?
    (1) "நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவர்களிடம் அன்பு செலுத்துங்கள்."
    (2) "இவ்வாறு தந்தையிடம் செபியுங்கள்."
    (3) "தாம் கொடுப்பதை மற்றவர்களுக்குத் தெரியாமல் கொடுங்கள்."
    (4) "தந்தையிடம் எப்போதும் செபியுங்கள்."
    (5) "ஒருவர் மற்றொருவருடைய கால்களைக் கழுவுங்கள்."

43. கி.பி. 1968 இல் நிறுவப்பட்டு, இன்று இலங்கையில் எல்லா மறை மாவட்டங்களிலும் பற்பல பெயர்களில் நலன்புரிப் பணிகளில் ஈடுபட்டுவரும் நிறுவனம் யாது?
    (1) வின்சென்ட் டி போல் சபை
    (2) மரியாயின் சேனை
    (3) கரிதாஸ் - செடெக்
    (4) சிறிய கிறிஸ்தவ குழுமம்
    (5) திரு இருதய சபை

44. திருச்சபையின் பயணிக்கும் தன்மையைப் பற்றிக் கூறியவர்,
    (1) தூய சிறில்
    (2) எட்வட் ஸ்கிலபேக்ஸ்
    (3) தூய தோமஸ் அக்குவைனஸ்
    (4) தூய அகுஸ்தினார்
    (5) ஆதர் பிவ்ரான்

45. திருச்சபையின் அருளடையாள இயல்பு தொடர்பாகப் பல்வேறு கருத்துக்கள் நிலவியுள்ளன. அவற்றுள் திருச்சபையை 'சாக்கிரமேன்டும்யுனிடாட்டிஸ்' என அறிமுகப்படுத்தியவர்
    (1) தூய அன்சலம்
    (2) தூய ஜஸ்டின்
    (3) தூய சிப்பிரியான்
    (4) தூய இரோணிமுஸ்
    (5) கார்ள் ராணர்

46. உடன்படிக்கையின் மக்களாக விடுதலை பெற்ற விழாவினைக் கொண்டாடிய யூதர்களின் பலி உணவாக விளங்கியது
    (1) ஒரு சோடி மாடப்புறா
    (2) ஒரு சோடிப் புறா
    (3) கொழுத்த கன்று
    (4) சில கோதுமை ரொட்டிகள்
    (5) தலைப்பேறான மாசற்ற செம்மறி ஆட்டுக்குட்டி

47. தூய பவுல், தூய ஆவியை எவ்வாறு விளக்குகிறார்?
    (1) குழு வாழ்வு
    (2) இயேசுவின் ஆன்மா
    (3) திருச்சபை
    (4) காணமுடியாத உருவம்
    (5) மாட்சிமிகு முடி

48. "படைப்பவரான இறைவனின் படைப்பில் முதன்மையான இடத்தை வகிப்பவன் மனிதனேயாவான்" எனக் குறிப்பிடப்படுவது,
    (1) சமய சுதந்திரம் பற்றிய வெளியீட்டிலாகும்.
    (2) இன்றைய உலகில் திருச்சபை என்னும் கொள்கைத் திரட்டிலாகும்.
    (3) மேலைத்தேய கத்தோலிக்க சபை பற்றிய வெளியீட்டிலாகும்.
    (4) கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வியிலாகும்.
    (5) கீழைத்தேய கத்தோலிக்க சபை பற்றிய வெளியீட்டிலாகும்.

49. இறைவனின் சாயலாகவும் உருவமாகவும் படைக்கப்பட்ட மனிதனுக்கு, சூழல் தொடர்பாக உள்ள பொறுப்பு என்ன?
    (1) திட்டமிடுபவரும் உரிமையாளனும்
    (2) உரிமையாளனும் மீட்பவனும்
    (3) படைப்பவனும் மீட்பவனும்
    (4) பொறுப்பாளியும் தலைவனும்
    (5) தலைவனும் உரிமையாளனும்

50. ஏனைய மதங்கள் தொடர்பாகத் திருவிவிலியப் பின்னணி பற்றிய கலந்துரையாடலில் விடுதலைப் பயண நிகழ்வுக்கு முன்னர் நிலவிய உடன்படிக்கையின் வழியாக, இறைவனது மீட்பு அனைவருக்கும் திறந்திருப்பதாக எடுத்துக்காட்டுவது
    (1) ஆதாம் ஏவாளின் கதை
    (2) காயின் ஆபேலின் கதை
    (3) மோசே பற்றிய கதை
    (4) பாபேல் கோபுரம் பற்றிய கதை
    (5) நோவாவுடன் செய்துகொண்ட உடன்படிக்கை

* * *

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

ක්‍රිස්තියානි ධර්මය II
கிறிஸ்தவம் II
Christianity II

43 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

**அறிவுறுத்தல்கள்:**

* பகுதி I இல் எவையேனும் **இரண்டு** வினாக்களையும், பகுதி II இல் எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (i) 70 வருடங்களாக நாடு கடத்தப்பட்டவர்களாகத் துன்பத்துடன் வாழ்ந்த மக்களிடத்திற்கு இறைவன் இறைவாக்கினர்களை அனுப்பியமைக்கான **நான்கு** காரணங்களை எழுதுக.

(ii) இணைத்திருமறை நூல்களை **அனுமதிக்காத** திருச்சபையின் தந்தையர்கள் **நால்வரைப்** பெயரிடுக.

(iii) எசெக்கியேல் இறைவாக்கினர் எடுத்துக்காட்டுவதன்படி மறுவாழ்வைக் காரணமாகக் கொண்டு மக்களிடத்தில் புதிய வாழ்வொன்று பற்றிய எதிர்நோக்குகளை ஏற்படுத்தும் **நான்கு** துறைகளை எழுதுக.

(iv) பன்னிரண்டாம் நூற்றாண்டில் கிறிஸ்தவ இறையியல், கிறிஸ்தவ கலாசார வளர்ச்சிக்காக பங்களிப்பு வழங்கிய இறையியலாளர்கள் **நால்வரைப்** பெயரிடுக.

(v) இயேசு சபை பற்றிய பிரதான விடயங்கள் **நான்கு** எழுதுக.

(04 × 5 = 20 புள்ளிகள்)

**2.** (i) யூத சமுதாயத்தில் பெண்கள், சிறுவர்கள், அடிமைகள் ஆகியோரின் சமூக நிலைப்பாடு பற்றிய **நான்கு** விடயங்களை எழுதுக.

(ii) நீரோ கலாபனையின் போது உரோமையில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு ஆன்மீக ஆறுதல் தரும்முகமாகத் தூய மாற்குவின் நற்செய்தி அமைந்துள்ள முறையை **நான்கு** காரணிகளூடாக எடுத்துக்காட்டுக.

(iii) தூய யோவான் நற்செய்தியின்படி பிலாத்து முன்னிலையில் நிகழ்த்தப்பட்ட விசாரணையின் படிமுறைகள் **நான்கினை** எழுதுக.

(iv) 16 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட சமய மறுமலர்ச்சிக்கும் புதிய சமய இயக்கங்கள் தோன்றுவதற்கும் ஏதுவான காரணிகள் **நான்கினை** எழுதுக.

(v) நிலவி வந்த தேவாலய அமைப்பு முறைகளை மாற்றி, மறுமலர்ச்சியாளரான ஜோண் கல்வின் அவர்களால் கட்டியெழுப்பப்பட்ட ஆலயங்களில் **காணப்படாத** விடயங்கள் **நான்கினை** எழுதுக.

(04 × 5 = 20 புள்ளிகள்)

**3.** (i) கீழைத்தேய கலையான 'அயிகோன்' (ICON) ஓவியக்கலையின் பண்புகள் **நான்கு** எழுதுக.

(ii) இலங்கை கிறிஸ்தவ திருச்சபை வரலாற்றைக் கற்பதன் முக்கியத்துவம் பற்றி **நான்கு** விடயங்கள் எழுதுக.

(iii) 'கொஸ்மஸ் இன்டிகொப்லேசுஸ்டஸ்' என்னும் உல்லாசப் பயணியின் கருத்தின்படி இந்நாட்டில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்தார்கள் என்பதனை அறிந்து கொள்ளக்கூடியதாகவிருந்த சான்றுகள் **நான்கினை** முன்வைக்குக.

(iv) விஜயபாகு கொள்ளையுடன் தொடர்புடைய இளவரசர்கள் மூவரையும், அவர்களிடையே பகிர்ந்து கொள்ளப்பட்ட இராச்சியத்தையும் பெயரிடுக.

(v) ஒல்லாந்தர் காலத்தில் கண்டியில் கத்தோலிக்கருக்கு உதவுவதற்கு குருக்கள் எவரும் இல்லாதிருந்த போதும் கத்தோலிக்கர் தமது சமய நெறியில் வாழ்ந்தார்கள் என்பது குறித்து றொபட்நொக்ஸ் குறிப்பிட்டுள்ள விடயங்கள் **நான்கு** எழுதுக.

(04 × 5 = 20 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



## பகுதி II

**4.** (i) இயற்கையின் ஊடாக இறைவன் இஸ்ராயேல் மக்களுக்கு மோசே மூலம் விடுதலையைப் பெற்றுக்கொடுத்த முறையைப் பத்துப் பெரும் துன்பங்களையும் அடிப்படையாகக் கொண்டு, திருவிவிலிய ஆசிரியர் எவ்வாறு எடுத்துக்காட்டுகிறார் என்பதை **ஐந்து** காரணிகளின் துணையுடன் விபரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) இயற்கையின் ஊடே இடம்பெறும் சம்பவங்கள் மூலம் நமக்கு மீட்பு கிட்டுகிறது என்பதை நீர் பெற்ற அனுபவத்தினூடாக விளக்குக. (10 புள்ளிகள்)

**5.** (i) போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கைக் கல்வித்துறையின் வளர்ச்சிக்கான திருச்சபையின் பங்களிப்பை **ஐந்து** காரணிகளின் துணையுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) "வெளிநாட்டு மறையைப் பின்பற்றுபவர்களாக இன்று கிறிஸ்தவர்கள் அறியப்பட்டாலும், இலங்கையின் வெவ்வேறு துறைகளின் வளர்ச்சிக்குக் கிறிஸ்தவ திருச்சபையின் பங்களிப்பு கிடைத்துள்ளது" என்ற கூற்றை **ஐந்து** காரணிகளின் ஊடாக விளக்குக. (10 புள்ளிகள்)

**6.** (i) 'பெண்கள் பற்றிய கிறிஸ்தவ சிந்தனை' என்னும் தலைப்பில் பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு பத்திரிகை ஒன்றிற்குக் கட்டுரை ஒன்று எழுதுக.

(அ) பெண்கள் தொடர்பான திருச்சபையின் படிப்பினைகள்

(ஆ) பழைய ஏற்பாட்டின் தொடக்க நூலில் குறிப்பிடப்பட்டுள்ள பெண் பாத்திரங்கள்

(இ) புதிய ஏற்பாட்டின் மீட்பின் செயலில் பங்கேற்ற **இரண்டு** பெண் பாத்திரங்கள் (10 புள்ளிகள்)

(ii) சமுதாயத்தில் பொது நன்மைகளைப் பூர்த்திசெய்ய கிறிஸ்தவனாகிய உமது செயற்பாடு எவ்வாறு அமைய வேண்டும் என்பதைத் திருவிவிலிய நோக்கில் **ஐந்து** விடயங்களினூடாக விபரிக்குக. (10 புள்ளிகள்)

**7.** (i) இயேசுவின் தூதுப்பணி பலஸ்தீனாவின் அழகிய இயற்கைச் சூழலுடன் எவ்வாறு தொடர்புபடுகிறது என்பதனை நற்செய்தி நூல்களிலிருந்து உதாரணங்களைக் குறிப்பிட்டு, **ஐந்து** காரணிகளின் துணையுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) திருவிவிலிய நோக்குடன் இணைந்த இயற்கை இறைவனின் கொடையாகும் என்பதைத் தியானிக்கும் போது, இயற்கையைப் பாதுகாத்தல் தொடர்பாக எமக்குள்ள கடமையை கிறிஸ்தவ பிள்ளையாக எவ்வாறு செயற்படுத்துவீர் என்பதனை **ஐந்து** காரணிகளினூடாக விளக்குக. (10 புள்ளிகள்)

**8.** (i) தூய யோசப்வாஸ் அடிகளாரின் மறைத்தூதுக் கொள்கைகள் **நான்கினைக்** குறிப்பிட்டு, அவற்றில் **மூன்றினை** விபரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) தூய யோசப்வாஸ் அடிகளார், யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளார் ஆகியோரின் மறைத்தூதுப் பணிகள் பற்றியதொரு மதிப்பீட்டினை மேற்கொண்டு, அதில் இன்றைய திருச்சபை பின்பற்றக்கூடிய முன்மாதிரிகள் **ஐந்தினைக்** குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

* * *

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk